III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.284/2019

Deposition of witness for the Plaintiff/PW2
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 29-07-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துராஜ் | Village | : |
| Father's / Husband's Name | : தங்கராஜ் | Calling | : |
| Age | : | Taluk | : |

2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

நான் தாக்கல் செய்திருக்கின்ற பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியும். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதி எனக்கு 10 ஆண்டுகளுக்கு மேலாக பழக்கம். நான் நீதிமன்றத்திலிருந்து சம்மன் கிடைக்கப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. வாதி எனது நண்பர் என்பதால் தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் எனக்கு வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருவரையும் தெரியும். என்னிடம் காட்டப்படுகின்ற நான் சாட்சி கையொப்பம் இட்ட வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் முதல் தாளில் உள்ள முத்திரைத் தாளின் தேதி என்னாலும் வாதியாலும் தான் மேல் எழுத்தாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தப்பத்திரம் இவ்வாறு மேல் எழுத்தாக தேதி எழுதப்பட்டதால் செல்லாதது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2. கிரைய ஒப்பந்தப்பத்திரம் நான் சொல்லுவது போல் தயார்செய்யப்பட்டதல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2. ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் இது வில்லங்கத்தில் வராது என்பதாலும் பிரதிவாதி தகுந்த சட்ட கருத்துரைப் பெற்றுதான் தாவா சொத்தை வாங்கியிருக்கிறார் என்றால் எல்லாம் தெரிந்தே வாங்கினார். 2 ஆம் பிரதிவாதிக்கு இந்த விவரம் தெரியும் என்பதை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியோ நானோ சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கனவே கிரைய ஒப்பந்த பத்திரம் போடப்பட்டுள்ளது என்று தடை மனு எதுவும் தாக்கல் செய்தோமா

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ஆம் பிரதிவாதி 3ஆம் பிரதிவாதியிடம் ஏற்படுத்திவைத்திருந்த தாவா சொத்தை பொறுத்த அடமானத்தை 2ஆம் பிரதிவாதி அடைத்துவிட்டுத்தான் கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி வாங்கிய தேதியிலிருந்து அவர் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் பத்திரம் பன்னிவிட்டார்கள் என்று எனக்கு தெரியும். வாதி அழைத்து நான் சாட்சியம் அளிக்க வந்திருப்பதால் என்னுடைய சாட்சியம் அனுமதிக்கப்பட முடியாதது என்றால் சரியல்ல.

3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பூ வியாபாரம் செய்து வருகிறேன். கோயம்பேட்டில் பூ வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடைய கடை எண். எஃப்.ஏ.79. எனக்கு வாதி அழகர் சாமியை 10 ஆண்டுகளாக தெரியும். அழகர் சாமியின் கடை எண்.எஃப்.சி.48. என்னுடைய கடை மார்க்கெட்டின் என்ட்ரன்சில் உள்ளது. அழகர் சாமியின் கடை மார்க்கெட்டின் பின்புறமாக உள்ளது. என்னுடைய கடையிலிருந்து அவருடைய கடைக்கு ஒரு நிமிட நடை நேரத்தில் சென்றுவிடலாம். வா.த.சா.ஆ.2 ஒப்பந்தப்பத்திரம் வீட்டை வாங்குவதற்கான ஒப்பந்தப்பத்திரம். வா.த.சா.ஆ.2 ஒப்பந்தம் எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் அதனை அவர்கள் அடித்துக் கொண்டுவந்தார்கள். நான் அழகர்சாமியின் கடையில் வைத்து சாட்சி கையொப்பம் போட்டேன். அழகர்சாமி கடையில் முருகன் என்பவரும் கையெழுத்துப்போட்டார். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2.ஒப்பந்தத்தில் உள்ள சிவக்குமார் மற்றும் அழகர்சாமியின் ஆகியோரது கையொப்பம் என்முன்னால் போடப்பட்டது. எத்தனை மணிக்கு போட்டார்கள் என்று என்னால் சரியாக டைம் சொல்ல முடியாது. இந்த ஒப்பந்தம் சிவக்குமாரின் வீட்டை 42 லட்ச ரூபாய்க்கு விற்பது சம்மந்தமானது. அக்ரிமெண்ட்டுக்கு முன்பணம் 30 லட்சம் ரூபாய். அழகர்சாமி இந்த பணத்தை சிவக்குமாரிடம் கொடுத்தார். பணம் கொடுத்ததை நான் பார்த்தேன். கையொப்பம் போடுவதையும் நான் பார்த்தேன். டைம் எனக்கு சரியாக தெரியவில்லை. வா.த.சா.ஆ.2. ஒப்பந்தப்பத்திரத்தை எங்கு தட்டச்சு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதனை தயார் செய்தது யார் என்று எனக்கு தெரியாது. அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் என் கடையில் வியாபாரம் செய்துகொண்டிருந்தேன். வியாழன், வெள்ளி நாட்களில் பூ வியாபாரம் 2 லட்சம் ரூபாய் வரைக்கும் நடக்கும். பண்டிகை காலமான ஆயுதபூஜை, விநாயகர் பூஜை,

வரலட்சுமி பூஜை ஆகிய நாட்களில் கர்நாடகா சென்று தோட்டங்களில் 5 லிருந்து 10 லட்சம் வரைக்கும் விவசாயிகளிடமிருந்து பூ வாங்கி 20 லட்சம் 30 லட்சத்திற்கு விற்போம். தோட்டங்களில் மொத்தமாக பூ வாங்கினால் அதனை நாங்களே விற்பனை செய்துகொள்வோம். விவசாயிகள் கொண்டுவந்து அதனை நாங்கள் விற்பனை செய்யும்போது 15 சதவீதம் கமிஷன் எடுத்துக்கொள்வோம். மார்க்கெட்டின் பின்புறம் உள்ள அழகர்சாமியின் கடையிலும் இதே போல் விற்பனை ஆகுமா என்றால் பின்புறம் தான் அதிக whole sale விற்பனை ஆகும். whole sale என்ன என்றால் மொத்தமாக வரும் பூவை பிரித்து மொத்தமாக விற்பனை செய்வோம். 30 லட்ச பணத்தை 500 ரூபாய் நோட்டாக கொடுத்தார். அதனை நான் எண்ணிப்பார்த்தேனா என்றால் பேக்கில் வைத்துக்கொடுத்தார்கள். அதை வைத்து சொல்கிறேன். அதில் ஊர்ஜிதமாக 30 லட்சம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. விற்பனை செய்த பணத்தை கடையில் பீரோவில் பாதுகாப்பாக வைப்போம். கேமிரா இருக்கிறது. என்னிடம் பூ வாங்குபவர்கள் 500 ரூபாய் தாளாக மட்டும் தான் கொடுப்பார்களா என்றால் எல்லா விதமான நோட்டுகளும் கொடுப்பார்கள். வாதி அழகர்சாமியின் கடையிலும் இப்படித்தானே என்றால் எல்லாக் கடைகளிலும் இப்படித்தான். வா.த.சா.ஆ.2 ஆவணத்தின் முதல் தாளில் கருவூலத்தின் முத்திரையில் தேதி பேனாவால் எழுதப்பட்டுள்ளது. அந்த தேதி முத்திரைத்தாளில் கண்டுள்ள உண்மையான தேதி கிடையாது என்றாலும் முத்திரைத்தாளை நாங்கள் திருத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. மாவட்ட கருவூலத்தின் தேதி முத்திரைக்கு மேல் மேலெழுத்தாக இது எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதை போல அழகர்சாமியின் கடையில் வைத்து எந்தவொரு கிரைய ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றாலும் நான் எந்த ஒரு சாட்சி கையெழுத்தையும் போடவில்லை என்றாலும் சரியல்ல. நான் வா.த.சா.ஆ.2. கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போடும் போது நாங்கள் 4 பேர்கள் மட்டும் இருந்தோமா அல்லது வேறு யாரும் அங்கு இருந்தார்களா என்றால் பக்கத்து கடைக்காரர்கள் எல்லாம் இருந்தார்கள். அவ்வாறு பக்கத்தில் உள்ளவர்களை பேர் சொல்லி கூப்பிடமாட்டோம். இன்சியல் வைத்துத்தான் கூப்பிடுவோம். நான் இவ்வாறு கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி 3 வது பிரதிவாதி வங்கியில் கடன் வாங்கியுள்ள விவரம் எனக்கு முன்னரே தெரியும். இந்த அடமானக்கடன் தெரிந்திருந்தும் வங்கியில் முன் அனுமதி இல்லாமல் எப்படி கிரைய ஒப்பந்தம் மேற்கொள்ளலாம் என்றால் வங்கிக் கடனை அடைப்பதற்காகத்தான் கிரைய ஒப்பந்தம் செய்தார். கிரைய ஒப்பந்தம் போட்டபொழுது வங்கிக்கு சென்று

கடன் எவ்வளவு இருக்கின்றது அதனை நாங்கள் அடைத்துவிடுகிறோம் என்று கேட்டோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த 30 லட்ச ரூபாய் முன்பணத்தை வங்கியில் செலுத்துவதற்காகத் தான் வாங்கினார் என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது நான் உடன் இருந்தேன். எப்.சி.48 கடையில் பேசிக்கொண்டிருந்தபோது கேட்டேன். பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டதுதான். மற்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கு சொத்தை வாங்கியிருக்கிற திருமுருகனும் மார்க்கெட்டில் கடை வைத்திருக்கிறார். திருமுருகன் இரண்டு கடை வைத்திருக்கிறார். அதனுடைய எண்கள் சி வரிசையில் இருக்கிறது. நான் சொல்வது போல அழகர்சாமி கடையில் வைத்து வா.த.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதை போல அதில் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தத்தின் நேரத்தை சொல்லாததால் என்னுடைய சாட்சியம் பொய்யானது என்றால் சரியல்ல. வாதி என்னுடைய நண்பர் என்பதால் அவருக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவக்குமார் என்னுடைய பக்கத்து ஊர்க்காரர். சிவக்குமாருடன் எனக்கு முன்பகை இருந்ததால் அதை தீர்ப்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் முருகன் என்பவரே கையெழுத்திடவில்லை என்றாலும் பின்னிட்டு அதனை நாங்கள் சிருஷ்டி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் அது ஆங்கிலத்தில் உள்ளது. எனக்கு தெரியாது. இருவரும் பேசிக்கொண்டதை வைத்துச் சொல்கிறேன். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். அழகர்சாமி என்ன படித்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய சாட்சியம் பொய்சாட்சியம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.